பக்கங்கள்: 08
காலைக்கதிர்
Kalaikkathir
மாலைப்பதிப்பு
சாயல் 02 வள்ளுவர் ஆண்டு 2052 ஐப்பசி 15 திங்கட்கிழமை 01.11.2021 கதிர் 224

## குழு மோதலில் ஒருவர் மரணம்

இரு குழுவினருக்கு இடையே ஏற்பட்ட மோதலின்போது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகம் மற்றும் தாக்குதலில் ஒருவர் மரணமடைந்ததுடன் இருவர் படுகாயமடைந்துள்ளனர். ☞2

# வடக்கு மீனவப் பிரதிநிதிகள் இந்தியத் தூதருடன் பேச்சு!

## சுமந்திரனின் ஏற்பாட்டில் கொழும்பில்

தமிழக – இலங்கை மீனவர்கள் இடையேயான முறுகல் நிலையைத் தனித்து முரண்பாட்டை களைவதற்கான முயற்சியாக வடபகுதி மீனவர்களின் பிரதிநிதிகளை கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே இன்று மாலை கொழும்பில் சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பை ஏற்பாடு செய்திருந்த தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரனும் சந்திப்பில் பங்குபற்றினார். ☞2





## வடக்கில் இரு நாள்கள் மழை நீடிக்கும்

வடக்கு மாகாணத்தில் மேலும் 2 நாள்களுக்கு மழை நீடிக்கும் என்று யாழ்ப்பாணம் பல்கலைக்கழக புவியியல் துறைசிரேஷ்டவிரிவுரையாளர் என்.பிரதீபராஜா தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- ☞2

# கொரோனா அதிதீவிரம்; மக்களே மிக அவதானம்!

## இராணுவத் தளபதி எச்சரிக்கை





நாட்டில் சில கட்டுப்பாடுகள் நீக்கப்பட்டுள்ள போதிலும், கொரோனாத் தொற்று நோய் இன்னும் அதிகமாகப் பரவி வருவதால்மக்கள்சிந்தித்துச்செயற்படவேண்டும்.

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்தார்.

நாரஹேன்பிட்டி இராணுவ வைத்தியசாலையில் இன்று முன்னணி இராணுவத்தினருக்குப் பூஸ்டர் தடுப்பூசியை ☞2

## மேலும் 28 பேர் கைது!

நாட்டில் தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில், இன்று காலை 6 மணியுடன் நிறைவடைந்த 24 மணித்தியாலங்களில் 28 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் தலைமையகம் வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது. ☞2

## செயலணியில் தமிழ்ப் பிரதிநிதிகள் அவசியத்தை ஏற்றுக்கொள்கின்றேன்

### ஞானசார தேரர் பகிரங்க அறிவிப்பு



'ஒரே நாடு ஒரே சட்டம்' என்பதற்கான ஜனாதிபதி செயலணிக்குத் தமிழ்ப் பிரதிநிதிகள் அவசியம் என்பதை தாம் ஏற்றுக்கொள்கிறேன் என அதன் தலைவர் கலகொட அத்தே ஞானசார தேரர் தெரிவித்தார்.

இந்தச் செயலணி தொடர்பில் காணொலி ஊடாக இன்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் வைத்து அவர் இதனைக் குறிப்பிட்டார். ☞2

## கோட்டாபயவுக்கு எதிராக கிளாஸ்கோவில் போராட்டம்

பிரிட்டன், ஸ்கொட்லாண்டில், கிளாஸ்கோ நகரில் காலநிலை மாற்ற மாநாடு நடந்து கொண்டிருக்கும் நிலையில், அந்நகரத்தில் புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

இந்த மாநாட்டில் ஸ்ரீலங்கா அரச தலைவர் கோட்டாபய ராஜபக்ஷ கலந்து கொண்டு உரையாற்றியுள்ளார். ☞2




## கூட்டு ஆய்வு நடவடிக்கை குறித்து பல்கலையில் ஆராய்வு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழகமும், பனை அபிவிருத்தி சபையும் இணைந்து மேற்கொள்ளவுள்ள ஆய்வு நடவடிக்கைகள் தொடர்பிலான பூர்வாங்க சந்திப்பு இன்று பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றது.

பனை அபிவிருத்தி சபையால் முன்மொழியப்பட்டுள்ள ஆய்வு நடவடிக்கைகளில் இரு தரப்பனதும் பங்கு பற்றி நேற்றைய சந்திப்பின் போது விரிவாக ஆராயப்பட்டது. ☞2

## குழு மோதல் ...........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காலி, ஊருகஸ்மங்சந்தி பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கருவலகொட பிரதேசத்தில் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது என்று பொலிஸ் தலைமையகம் இன்று வெளியிட்டுள்ள செய்தி அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இந்தச் சம்பவத்தில் மடக்கும்புர, கரன்தெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 51 வயது நபரே உயிரிழந்துள்ளார்.

சம்பவத்தில் உயிரிழந்த நபர், துப்பாக்கியுடன் மற்றுமொருவரை அழைத்துக்கொண்டு களுவலகொட பிரதேசத்திலுள்ள வீடொன்றுக்கு சென்று துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்டுள்ளார்.

இந்தச் சம்பவத்தில், குறித்த வீட்டிலிருந்த பெண்ணொருவர் படுகாயமடைந்துள்ளார்.

இதையடுத்து வீட்டிலிருந்த நபர், துப்பாக்கிப்பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மீதும் அவருடன் சென்ற நபர் மீதும் கடும் தாக்குதலை மேற்கொண்டுள்ளார்.

இதன்போதே துப்பாக்கிப் பிரயோகத்தை மேற்கொண்ட நபர் மரணமடைந்துள்ளார்.

சம்பவத்தில் படுகாயமடைந்த பெண்ணும், நபரும் எல்பிட்டிய வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, தாக்குதலுடன் தொடர்புடைய நபரை கைதுசெய்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வடக்கில் இரு .......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கடந்த 27 ஆம் திகதி வங்காள விரிகுடாவில் உருவான தாழமுக்கம் மேற்கு வடமேற்கு திசையில் நகர்ந்து தற்போது சிலாபத்துக்கு 67 கிலோமீற்றர் தொலைவில் நிலை கொண்டுள்ளது.

இந்தத் தாழமுக்கமானது தற்போது சிலாபத்துக்கு மேற்காக நிலை கொண்டிருப்பதால் வடக்கு மற்றும் கிழக்கு மாகாணம் உட்பட நாட்டின் பல பாகங்களுக்கும் தொடர்ச்சியாக இரண்டு நாள்களுக்கு மழை கிடைப்பதற்கான வாய்ப்புக் காணப்படுகின்றது - என்றார்.

## மேலும் 28 ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதற்கமைவாக இதுவரை தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் 81 ஆயிரத்து 549 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸ் தலைமையகம் மேலும் குறிப்பிட்டுள்ளது.

## கொரோனா அதிதீவிரம் ..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

அன்றாடம் 500 முதல் 600 கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படும் நிலையில் பொதுமக்கள் பொறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும். இல்லையெனில் எதிர்காலத்தில் கொரோனாத் தொற்றாளர்களது எண்ணிக்கை அதிகரிக்கக்கூடும்.

மக்களின் வாழ்க்கையைக் கருத்தில் கொண்டு மாகாணங்களுக்கு இடையேயான கட்டுப்பாடுகள் உட்பட பல்வேறு கட்டுப்பாடுகளை நீக்குவதற்கான முடிவு எடுக்கப்பட்டது.

எனவே, மக்கள் சுகாதார வழிமுறைகளைப் பின்பற்றி பெறுப்புணர்வுடன் செயற்பட வேண்டும் - என்றார்.

## செயலணியில் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

தமிழ்த் தேசிய அரசியல் தரப்பினர் தங்களுக்கான வாக்குகள் குறித்தே கவனம் செலுத்துகின்றனர்.

வடக்கு, கிழக்கில் மத ரீதியான பல பிரச்சினைகள் காணப்படுகின்றன. எனினும், தெற்குடனான மதப் பிரச்சினை குறித்து கருத்துரைக்கின்றனர்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகளை நாம் நன்கு அறிந்துள்ளோம்.

இந்நிலையில், தற்போது வாய்ப்பு கிடைத்துள்ளது. இதன் ஆரம்பத்திலேயே அதில் உள்ள குறைபாடுகளைக் கூறி பிரச்சினைகளை ஏற்படுத்தாமல் முதலில் அதன் திட்டங்களை வகுப்பது முக்கியமானதாகும்.

இந்த நாட்டில் சிறுபான்மை என்று ஒரு இனம் இல்லை.

நாட்டில் இலங்கையர்கள் என்ற இனம் மாத்திரமே இருக்கின்றது. இன ரீதியாக யாரையும் பிரித்துப் பார்க்க வேண்டிய அவசியம் இல்லை - என்றார்.

## கூட்டு ஆய்வு .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பனை அபிவிருத்தி சபையின் சார்பில் அதன் தலைவர் கிரிசாந்த பத்திராஜா, அதன் பணிப்பாளர் சபை உறுப்பினரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆலோசகருமான பேராசிரியர் சு. மோகன்தாஸ், பனை அபிவிருத்தி சபையின் பிரதிப் பொது முகாமையாளரும், பனை ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆராய்ச்சி மற்றும் தர நிர்ணய முகாமையாளருமான எஸ். விஜேந்திரன் ஆகியோர் பல்கலைக்கழகத் துணைவேந்தர் பேராசிரியர் சி. சிறிசற்குணராஜாவைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

## வடக்கு மீனவப் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கை தமிழரசுக் கட்சியின் முன்னாள் மாகாணசபை உறுப்பினர் எஸ். சுகிர்தன் வழிகாட்டலில் மீனவர் பிரதிநிதிகள் குழு வடக்கிலிருந்து கொழும்புக்கு விசேடமாக வருகை தந்து இன்று மாலை இந்தியத் தூதுவருடன் விரிவான பேச்சுக்களில் ஈடுபட்டது.

கடந்த வாரம் கொழும்புக்கான இந்தியத் தூதுவர் கோபால் பாக்லே, கொழும்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனை அவரது இல்லத்தில் சென்று சந்தித்தார் என்பது தெரிந்ததே. அச்சந்திப்பில் சுமந்திரனும் பங்குபற்றியிருந்தார். அந்தச் சந்திப்பில் ஏற்பட்ட இணக்கத்தின் அடிப்படையிலேயே இன்றைய மீனவர் சந்திப்பு ஒழுங்குபடுத்தப்பட்டதாகத் தெரிகின்றது.

இந்தச் சந்திப்பு கொழும்பிலுள்ள இந்தியத் தூதரின் " இந்திய ஹவுஸ்" இல்லத்தில் நடைபெற்றது.

இந்த பேச்சுக்களின் விவரம் இன்று மாலைக்குப் பின் வெளியாகும் என எதிர்பார்க்கப்படுகின்றது. இந்தப்பேச்சுக்களில் பின்வரும் பிரதிநிதிகள் பங்குபற்றினர்.

✦ எஸ். சுகிர்தன் - முன்னாள் வடக்கு மாகாணசபை உறுப்பினர்
✦ என்.வி.சுப்பிரமணியம் - தலைவர், வடமாகாண கடல் தொழிலாளர் இணையம்
✦ ஜே.பிரான்சிஸ் - உப தலைவர், வடமாகாண கடல்தொழிலாளர் இணையம்
✦ ஏ.மரியராசா - பொருளாளர், வடமாகாண கடல் தொழிலாளர் இணையம்
✦ அன்ரனி யேசுதாஸன் - தேசிய மீனவர் நல்லிணக்க வடக்கு கிழக்கு இணைப்பாளர்
✦ வி.அருள்நாதன் - தலைவர், முல்லைத்தீவு அன்னை வேளாங்கண்ணி கடல் தொழிலாளர் கூட்டுறவு சங்கம்.

## கோட்டாபயவுக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, இன்று அதிகாலை ஐக்கிய ராச்சியத்தின் கிளாஸ்கோ நகரில் அவர் தங்கியிருந்த விடுதியை சூழ்ந்து கொண்ட புலம்பெயர் தமிழர்கள் ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டிருந்தனர்.

கிளாஸ்கோ நகரின் Dunblane, Hydro Perth Rd இலுள்ள Hiltonஇல் மாநாட்டில் கலந்துகொள்ள வந்துள்ள பல உலகத் தலைவர்கள் தங்கியிருக்கின்ற நிலையில், அங்கு தங்கியிருக்கும் கோட்டாபயவுக்கு எதிராக இன்று அதிகாலை முதல் கோஷங்களை எழுப்பி தமது எதிர்ப்புக்களைத் தெரிவித்திருந்தனர்.


'ராஜபக்ஷ ஒரு போர்க் குற்றவாளி', 'மனித உரிமைகளை மீறுபவர்', 'கொலையாளி' என்று பல்வேறு கோஷங்கள் அங்கு எழுப்பப்பட்டுக்கொண்டிருந்தன.

இந்நிலையிலேயே பின்னர் புலம்பெயர் தமிழர்கள் மாநாடு நடைபெறும் மண்டபத்திற்கு முன்னால் ஆர்ப்பாட்டத்தில் இறங்கியுள்ளனர்.

# அநுராதபுரம் ஆரம்பப் பிரிவு பாடசாலைகளில் கொத்தணி

அநுராதபுரம் மாவட்டத்தில் ஆரம்பப் பிரிவு பாடசாலை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் அதிகளவில் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி உள்ளனர் என்று அநுராதபுரம் மாவட்ட தொற்றுநோயியல் விசேட வைத்திய ஆர்.எம்.எஸ்.பி. ரத்னாயக்க தெரிவித்துள்ளார்.

அநுராதபுரம் நகர சபை, கலென்பிதுனுவெவ, பதவிய, தலாவ மற்றும் கஹடட்கஸ்திகிலிய பகுதியில் கொரோனாத் தொற்றாளர்கள் அதிகளவில் இனங்காணப்படுகின்றனர் என்றும் அவர் கூறியுள்ளார்.



ஹொரவப்பொத்தான, பதவிய மற்றும் தலாவ பகுதிகளில் உள்ள ஆரம்பப் பாடசாலைகளின் மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

## வீதி விபத்துக்கள் அதிகரிப்பு

# இரு நாள்களில் 12 பேர் மரணம்

நாட்டில் கடந்த இரு நாள்களில் இடம்பெற்ற வீதி விபத்துக்களில் 12 பேர் உயிரிழந்துள்ளனர் என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

விபத்துக்களால் மரணிப்பவர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் தளர்த்தப்பட்டதன் பின்னர், பொதுமக்களுக்கு வீதிகளில் பயணிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டதன் பின்னர் வீதிகளில் பயணிக்கும் வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

அதேபோன்று பாதுகாப்பின்றி, கவனயீனத்துடன் சாரதிகள் பயணிப்பதும் அதிகரித்துள்ளது.

விசேடமாக நேற்று இடம்பெற்ற விபத்துக்களில் பாதசாரிகள் மூவர் மரணமடைந்துள்ளனர்.

வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளையும் வாகனங்களையும் கருத்தில் கொண்டு மிக அவதானத்துடன் பயணிக்குமாறு சகல வாகன சாரதிகளிடமும் நாம் கோரிக்கை விடுக்கின்றோம்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களே அதிகளவில் விபத்துக்குள்ளாகின்றனர்.

மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களால் வீதிகளில் பயணிக்கும் பாதசாரிகளும் மரணமடைகின்றனர்.

அதேபோன்று விபத்துக்களை எதிர்கொள்வதால் மோட்டார் சைக்கிள் செலுத்துநர்களும் மரணிக்கும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன.

எனவே, வீதியில் பயணிக்கும்போது போக்குவரத்து விதிமுறைகளை மதித்து மிகவும் நிதானத்துடன் பயணிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

விபத்துக்கள் தொடர்பான வருடாந்த புள்ளிவிவரத் தகவலைப் பார்க்கும்போது மோட்டார் சைக்கிள் விபத்துக்களே அதிகளவு பதிவாகியுள்ளன - என்றார்.



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com

தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மீனவர் பிரச்சினைகளைப் புரிதல்

'நாய் வாலை நிமிர்த்த முடியாது' என்பார்கள். அப்படித் தீர்வு காண முடியாத சில பிரச்சினைகள் இடியப்பச் சிக்கலாக நம் மத்தியில் உள்ளன.

இலங்கைத் தமிழர்களின் தேசிய இனப் பிரச்சினைக் குத் தீர்வு காண முடியாமல் இருப்பதும் கூட அப்படிப்பட்ட ஒன்றுதான். தமிழக – இலங்கை மீனவர்கள் முறுகலும் – முரண்பாடும் – கூட அத்தகைய ஒன்றுபோலவே இழுபடுகின்றது.

ஆங்கிலத்தில் 'If there is a will there's a way' என்று ஒரு முதுமொழி உண்டு. உறுதிப்பாடு இருந்தால் ஒரு வழி இருக்கும் என்பது இதன் அர்த் தம்.

இலங்கையின் தேசிய இனப்பிரச்சினைக்கு எப்படி யும் தீர்வு காணவேண்டும் என்ற பற்றுறுதி – திடசங்கற்பம் – சம்பந்தப்பட்ட தரப்புக்கு அல்லது தரப்புகளுக்கு இருக்குமானால் எப்படியும் ஒரு தீர்வு எட்டப்பட முடியும். தீர்வு காண முடியாத அனைத்துப் பிரச்சினைகளுக்கும் இது பொருந்தும். எவ்வாறேனும் தீர்வு காண்போம் என்ற பற்றுறுதி இருக்குமானால்– திடசங்கற்பம் கொள்வோமேயானால் – தீர்வைக் காணலாம்.

ஆனால், இங்கு உண்மையான பிரச்சினை என்ன வென்றால் தீர்வு காண வேண்டும் என்ற அவா – விருப்பு – ஈடுபாடு – மன உறுதி – தரப்புகளுக்கு இல்லை என்பது தான்.

விருப்பம் இல்லாதமையால் தீர்வு கிட்டவில்லை என்பதுதான் பல சந்தர்ப்பங்களில் – பல விடயங்களில் – உறுதியான உண்மையாகும். பட்டவர்த்தனமான பட்டறிவாகும்.

அந்த நிலைமைதான் தமிழக – இலங்கை மீனவர்கள் முரண்பாட்டிலும் நீடிக்கின்றது. எப்படியும் இந்தப் பிரச்சி னையைச் சுமுகமாகத் தீர்க்க வேண்டும் என்ற பற்றுறுதி – திடசங்கற்பம் – நம்மத்தியில் இல்லவே இல்லை. அதனால்தான் முரண்பாடு நீடிக்கின்றது; முறுகல் முற்றுகின்றது; மோதல்கள் நிகழ்கின்றன.

மிகக் குறுகிய கடல் பிரதேசத்தால் பிரிக்கப்பட்ட இரண்டு நாடுகளின் மீனவர்கள் கடல் பிரிப்பு எல்லையின் தெளிவின்மை காரணமாக அடிக்கடி எல்லை தாண்டுவது தவிர்க்க முடியாததாகும். தவிரவும், கடல் வளம் உள்ள இடங்களை மீனவர்கள் தேடி நாடுவதும் வியப்புக்குரியது அன்று. அத்தோடு, இன்று நாம் கடலில் சுரண்டக் கூடியவற்றை அள்ளிச் சுரண்டி எடுத்து, ஈட்டுவதை ஈட்டிக்கொள்வோம், நாளைய கடல்வளம் என்னவானால் நமக்கு என்ன என்ற பொறுப்பற்றதனமும் மீனவர்கள் மத்தியில் தாராளம்.

இந்தப் போக்குகளே வீண் குழப்பங்களுக்கும், பிரச்சினைகளுக்கும், சீண்டல்களுக்கும், சிக்கல் களுக்கும் அடிப்படைக் காரணமாக அமைகின்றன.

இந்த விடயத்தில் அரசுகளின் தலைமைகள் தங்களின் ஆட்சி நலனுக்காகத் தந்திரோபாயமாகக் காய் நகர்த்தி, மீனவர் தரப்புகளை மோதவிட்டு, அந்தப் பதற்றத்தையும், குழப்பத்தையும், தமக்கு ஆதரவான அரசியலாக முன்னெடுக்க முயற்சிக்கின்றன.

இந்தப் பின்புலத்தில்தான் மீனவர்களோடு – வடக்குத் தமிழ் மீனவர்களோடு – இந்திய தரப்பு நேரடியாக பேசுவது உசிதமானது என்ற அடிப்படையில் தீர்மானம் எடுக்கப் பட்டு விடயம் முன்னகர்த்தப்படுகின்றது என்று தோன்று கின்றது. அதன் முதல் கட்டமே இந்திய தூதுவர் கோபால் பாக்லே வடபகுதி மீனவர் பிரதிநிதிகளை இன்று நேரடியாக அழைத்துப் பேசிய விடயமாகும்.

வடக்கு மீனவர்களின் அதிருப்தியை – ஆதங்கத்தை – அவலத்தை – இந்தியத் தரப்பு நேரடியாக புரிந்து கொள்வதற்கும், இரு தரப்புக்கும் மற்றும் கடல் வளத் துக்கும் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்கும் இந்த சந்திப்பு ஒரு மைல்கல்லாக அமையும் என எதிர்பார்க் கலாம்.

# பொருளாதார நெருக்கடியை உருவாக்க அரசுக்குள் இருந்துகொண்டு சிலர் முயற்சி

## இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றச்சாட்டு



அரசாங்கத்தில் இருக்கும் ஒருசில தரப்பினர் நாட்டுக்குள் பொருளாதார நெருக்கடியை உருவாக்கும் வகையில் செயற்பட்டு வருகின்றனர் என இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றம் சாட்டியுள்ளார்.

அரசாங்கத்துக்குள்ளேயே இருந்து கொண்டு எதிர்ப்பை வெளியிடும் நபர்களுக்கு எதிராக எதிர்காலத்தில் கடுமையான தீர்மா னங்கள் எட்டப்படும் என்றும் அவர் தெரிவித் தார்.

எதிர்க்கட்சியினர் இத்தகைய போராட்டங் களை முன்னெடுத்திருந்தால் பொறுத்துக் கொண்டிருக்க முடியும் என குறிப்பிட்ட அவர், அமைச்சர்கள் மற்றும் அரசதரப்பு உறுப்பினர்கள் இவ்வாறு நடந்துகொள்கின் றமை துரதிஷ்டவசமானது எனக் கூறினார்.

மேலும் அரசாங்கத்தில் பொதுமக்களிடம் சந்தேகத்தை ஏற்படுத்துவதன் மூலம் என்ன வெற்றியை அடைய முடியும் என செஹான் சேமசிங்க கேள்வி எழுப்பியுள்ளார்.

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான விசேட சந்திப்பில் இந்த பிரச்சினைகள் தொடர்பில் எவரும் கவலை தெரிவிக்கவில்லை என்றும் இராஜாங்க அமைச்சர் கூறினார்.

# சீரற்ற காலநிலையால் ராகலை பகுதியில் 7 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிப்பு









மலைநாட்டில் நிலவும் சீரற்ற கால– நிலையால் மக்களின் நாளாந்த நடவடிக் கைகள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளன.

நுவரெலியா, ராகலை பொலிஸ் பிரி வுக்கு உட்பட்ட ராகலை முதலாம் பிரிவு பகுதி யில் வெள்ளம் புகுந்ததை அடுத்து பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாள்களாக பெய்த மழையால் 7 குடும்பங்களைச் சேர்ந்த 22 பேர் பாதிக் கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவத்தில் வீடுகளின் கூரைகள் பாதிக்கப்பட்டுள் ளமையுடன், வீடுகளின் தளவாடங்கள் மற்றும் பொருள்களும் பாதிக்கப்பட்டுள்ளன.

அதேவேளையில், பாதிக்கப்பட்டவர்களை தோட்ட நிர்வாகத்தின் அதிகாரிகள் பார்வையிட்டுள்ளதோடு, சம்பவம் தொடர் பாக இப்பகுதி கிராமசேவகர் ஊடாக ராகலை பொலிஸார் மற்றும் மாவட்ட இடர்முகாமைத் துவ மத்திய நிலையம், தேசிய கட்டட ஆராய்ச்சி நிலைய அதிகாரிகள் ஆகியோரின் கவனத்துக்குக் கொண்டுவரப்பட்டுள்ளது.

இந்த நிலையில் பாதிக்கப்பட்டவர்கள் தோட்ட சிறுவர் பராமரிப்பு நிலையத்தில் பாதுகாப்பு கருதி தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான நிவாரண உதவிகளை நுவரெலியா பிரதேச சபையின் ஊடாக மேற் கொள்ள நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என பிரதேச சபை தவிசாளர் தெரிவித்தார். அத்தோடு, இந்தப் பகுதியில் தொடர்ச்சியாக இவ்வாறான நிலைமையே காணப்படு வதாகவும் குடியிருப்பாளர்கள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

எனவே, உடனடியாக சம்பந்தப்பட்ட அதி காரிகள் இதற்கு உரிய நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என குடியிருப்பாளர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# சமிக்ஞை கோளாறு காரணமாக கோட்டைக்கு வர ரயில்கள் தாமதம்



கொழும்பு கோட்டையை வந்தடையவி ருந்த பல ரயில்கள் தாமதமாகியுள்ளன என ரயில்வே திணைக்களம் தெரிவித்துள்ளது.

பிரதான பாதை உட்பட பல ரயில் பாதை களில் ஏற்பட்ட சமிக்ஞை கோளாறு காரண மாக இந்த நிலையேற்பட்டதாகத் தெரிவிக்கப் படுகிறது.

அதன்படி, இன்று காலை பிரதான பாதை மற்றும் புத்தளம் பாதையில் ரயில்கள் தாமதமாக வந்தன என திணைக்களத்தினர் தெரிவித்தனர்.

ஏனைய ரயில் பாதைகளிலும் சமிக்ஞை கோளாறுகள் பாதிக்கப்பட்டதால், பல ரயில் கள் தங்கள் இடங்களுக்குச் செல்வதில் தாமதம் ஏற்பட்டதாகவும் ரயில்வே திணைக் களம் தெரிவித்துள்ளது.

# வர்த்தக இலாபத்தில் 15 சதவீதத்தை வரியாக செலுத்த உலகத் தலைவர்கள் இணக்கம்

## ஜி 20 மாநாட்டில் தீர்மானம்

உலகின் முன்னணி நாடுகள் பாரிய அளவில் வர்த்தக நடவடிக்கைகள் ஊடாகப் பெறப்படும் இலாபத்தில் 15 சதவீதத்தை வரியாகச் செலுத்த இணக்கம் தெரிவித்துள்ளன.

உலக பொருளாதாரத்தில் முன்னணியில் உள்ள 20 நாடுகளின் தலைவர்களும் இதற்கு அனுமதி வழங்கியுள்ளனர்.

இது தொடர்பான இறுதி முடிவு எடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பன்னாட்டு நிறுவனங்கள் தங்கள் லாபத்தை குறைந்த வரி அதிகார வரம்புகள் மூலம் திருப்பிக் கொள்கின்றன என்ற கவலைகளுக்கு மத்தியில் 20 நாடுகளின் தலைவர்கள் அனுமதி வழங்கியுள்ளனர்.

ரோமில் நடைபெறும் ஜி20 நாடுகளின் மாநாட்டில் கலந்து கொண்ட சகல தலைவர்களும் இந்த ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டனர்.

இந்த மாநாட்டில் கொவிட் வைரஸ் தொற்று மற்றும் கால நிலை மாற்றம் என்பன குறித்தும் கவனம் செலுத்தப்படுகின்றது. இந்நிலையில், ஜி20 மாநாட்டில் கலந்து கொள்ளும் அமெரிக்கா, ஜேர்மன், பிரான்ஸ் மற்றும் பிரித்தானிய ஆகிய நாடுகளுக்கிடையிலான சந்திப்பொன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சந்திப்பின்போது, ஜி20 நாடுகளில் இல்லாத ஈரானின் அணு ஆயுத நடவடிக்கைகள்குறித்து கவலை வெளியிடப்பட்டுள்ளது.



# பொது வெளியில் தோன்றினார் தலிபான் அமைப்பின் தலைவர்



தலிபான் அமைப்பின் உச்சபட்ச தலைவரான ஹைபத்துல்லா அகுந்த்ஸடா, வரலாற்றில் முதல் முறையாக மக்கள் முன் தோன்றியுள்ளார்.

ஆப்கானிஸ்தானின் தென் பகுதியில் அமைந்துள்ள கந்தஹார் நகரில் நடைபெற்ற கூட்டத்தில் ஆதரவாளர்களிடம் அவர் பேசியுள்ளார்.

தலிபான்அமைப்பின் உச்சபட்ச தலைவரான ஹைபத்துல்லா அகுந்த்ஸடா, 2016ஆம் ஆண்டு முதல் அந்த அமைப்பின் ஆன்மீக தலைவராக பொறுப்பு வகித்து வருகிறார். ஓகஸ்ட் மாதம், ஆப்கானிஸ்தானை தலிபான்கள் கைப்பற்றிய பிறகும் கூட, அவர் பொது வெளியில் தலைகாட்டாமல் இருந்து வந்தார்.

புதிய தலிபான் அரசில் அவருக்கு என்ன பொறுப்பு வழங்கப்படும் என்பது குறித்து பல வதந்திகள் பரப்பப்பட்டமையுடன் அவர் இறந்துவிட்டார்எனவும்கூறப்பட்டது.

இந்நிலையில், சனிக்கிழமையன்று, இராணுவ வீரர்கள் மற்றும் ஆதரவாளர்களுடன் பேசுவதற்காக அகுந்த்ஸடா தாருல் உலூம் ஹக்கிமா மதரஸாவுக்கு சென்றார் எனதலிபான் அலுவலர்கள் தெரிவித்தனர்.

அங்கு பலத்த பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்ததுடன் படம் எடுக்க அனுமதி வழங்கப்படாத நிலையில், அங்கு எடுக்கப்பட்ட 10 நிமிட வீடியோ தலிபான் சமூக வலைதள பக்கத்தில் பகிரப்பட்டது.

கடந்த 2016ஆம் ஆண்டு, அமெரிக்க நடத்திய ட்ரோன் தாக்குதலில் அப்போது தலைவராக இருந்த முல்லா அக்கர் மன் சூர் கொல்லப்பட்டமையை தொடர்ந்து, அகுந்த்ஸடா தலைவராக தெரிவு செய்யப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஏமன் விமான நிலையம் அருகே வெடிப்பு; 12 பேர் பரிதாபச் சாவு



ஏமன் தெற்கு துறைமுக நகரமான ஏடனின் சர்வதேச விமான நிலையத்தின் நுழைவாயிலுக்கு அருகில் ஏற்பட்ட வெடிப்பு சம்பவத்தில் குறைந்தது 12 பேர் உயிரிழந்துள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.

கடந்த சனிக்கிழமையன்று விமான நிலையத்தின் வெளிப்புற வாயிலில் ஒரு சிறிய டிரக் வெடித்து சிதறியதாக விமான நிலைய அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

அதே நேரத்தில் அந்த வாகனம் பெற்றோலிய பொருள்களை ஏற்றிச் சென்றதாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

இருப்பினும் இந்த சம்பவம் திட்டமிட்ட தாக்குதலா என்பது தெளிவாகத் தெரியவில்லை.

சம்பவத்தில் காயமடைந்த பலர் உள்ளூர் வைத்தியசாலைகளில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர் என்றும் பாதுகாப்பு அதிகாரி ஒருவர் குறிப்பிட்டுள்ளார்.

ஏமனின் சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் தற்காலிக இடமாக உள்ள ஏடன் நகரை ஈரானுடன் இணைந்த ஹூதி குழுவிடம் இருந்து பாதுகாக்க சவுதி அரேபியாவின் ஆதரவுடன் ஆறு ஆண்டுகளுக்கும் மேலாக போராடி வருகிறது.

# டமாஸ்கஸ் பகுதிகளை நோக்கி இஸ்ரேல் ஏவுகணை தாக்குதல்

தலைநகர் டமாஸ்கஸின் புறநகர்ப் பகுதிகளை நோக்கி இஸ்ரேலில் இருந்து ஏவப்பட்ட ஏவுகணைகள் சிரியாவின் வான் பாதுகாப்புப் படையினரால் தடுத்து நிறுத்தப்பட்டன என அரசு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

டமாஸ்கஸைச் சுற்றியுள்ள கிராமப்புறங்களில் உள்ள தளங்களை குறிவைத்து தாக்கப்பட்ட ஏவுகணைகள் சிலவற்றைஅழித்ததாகசிரிய வான் பாதுகாப்பு இராணுவ அறிக்கை தெரிவிக்கின்றது. இரண்டு வீரர்கள்காயமடைந்தனர் மற்றும் சில பொருள் இழப்புகள்ஏற்பட்டனஎன அந்த அறிக்கையில் மேலும்தெரிவிக்கப்பட்டுள்ளது.இருப்பினும்லெபனானுக்குச்செல்லும்ஆயுதங்கள் மற்றும் வெடிமருந்துகளின் கப்பலை இலக்காகக் கொண்டு இந்த தாக்குதல்மேற்கொள்ளப்பட்டதாக மனித உரிமைகளுக்கான சிரிய கண்காணிப்பு அமைப்பு தெரிவித்துள்ளது.

தாக்கப்பட்ட பகுதிகளில் லெபனானின் ஹெஸ்பொல்லா குழுவிற்கான ஆயுதக்கிடங்குகள் மற்றும் சிரிய இராணுவம் மற்றும் ஈரான் ஆதரவு போராளிகளின் நிலைகள் உள்ளன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

Jaffna College Institute of Technology
Calls for the following courses

Computer Certificate Courses ( 3 – 4 months Part time)

- Certificate in MS OFFICE – (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer – (PageMaker,PhotoShop & CorelDraw)
- Computer Hardware Technician
- Web Designing(HTML, CSS, JAVA Script, PHP, MYSQL)
- Java, C++ Programming

Commencement in November 2021
At Our Jaffna Centre along
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road
Jaffna.
For further details contact
Tel no: 0212250975/0212223382
Email: ejcit@sltnet.lk.

# பாகிஸ்தானின் பணவீக்கம் அதிகரிப்பு!

அமெரிக்க டொலருக்கு எதிராக பாகிஸ்தான் ரூபா தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து வருகிறது, தற்போது பாகிஸ்தான் ரூபாவின் பெறுமதியானது டொலருக்கு 175 ஆக உயர்ந்துள்ளது என அந்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

அமெரிக்க டொலருக்கு நிகரான பாகிஸ்தான் ரூபாயின் சரிவு, அந்த நாட்டின் அந்நியச் செலாவணி விகிதத்தின் மீதான அழுத்தத்தை ஏற்படுத்தியுள்ளது. இதனால் பாகிஸ்தான் அரசாங்கம் அந்த அழுத்தங்களைக் குறைக்கும் நடவடிக்கைகளை அறிமுகப்படுத்தவுள்ளதாக கூறியுள்ள போதும் நிலைமைகளில் மாற்றங்கள் ஏற்படவில்லை.

பாகிஸ்தானில் அதிகரித்து வரும் பணவீக்கத்திற்கு மத்தியில் ரூபாவின் வீழ்ச்சி தொடர்கிறது. பாகிஸ்தானில் அன்றாட வாழ்க்கைக்குத் தேவையான பொருள்கள் விலைகள் அனைத்தும் விலையுயர்ந்துள்ளன. அத்துடன், பாகிஸ்தானின் எதிர்க்கட்சிகளால் அரசாங்கத்திற்கு எதிராக பாரிய கண்டனங்கள் மற்றும் போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதேநேரம், எஸ்.டி.பி. வங்கியின் ஆளுநர் ரெசா பகீர், ரூபா மதிப்பு வீழ்ச்சியை ஆதரித்து, அது வெளிநாட்டு பாகிஸ்தானியர்களுக்கு நன்மை பயக்கும் என்றும், நாட்டில் பணவீக்கம் செயற்கையானது என்றும் அது கட்டுப்படுத்தப்படும் என்றும் கூறியுள்ளார்.

இதனையடுத்து அவரது கருத்துக்கு எதிராக சமூக ஊடகங்களில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்நாடு தினத்தை மாற்றமுயல்வது வரலாற்றுத்திரிவு தி.மு.க. அரசின் செயலுக்கு நாம் தமிழர் சீமான் கண்டனம்



நவம்பர் முதலாம் நாளன்று கொண்டாடப்படும் தமிழ்நாடு தினத்தை மாற்றம் செய்து அரசாணை வெளியிட முனைவது மிகப்பெரும் வரலாற்றுத்திரிவு என்று நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் கண்டனம் தெரிவித்திருக்கிறார்.

இது தொடர்பாக சீமான் வெளியிட்டுள்ள அறிக்கையில், தமிழ்நாடு மொழிவாரியாகப் பிரிக்கப்பட்ட நாளான நவம்பர் முதலாம் நாள், தமிழ்நாடு நாள் என அறிவிக்கப்பட்டுக் கொண்டாடப்பட்டுவரும் நிலையில், அதனை மாற்றி அரசாணை வெளியிட முனையும் தமிழக அரசின் செயல் அதிர்ச்சியளிக்கிறது.

தமிழர்களின் வரலாற்றுத்தாயகமான தமிழ்நாடு, இந்திய ஒன்றியத்தால் மொழிவழி மாநிலமாக அறிவிக்கப்பட்ட தினத்தை விடுத்து, தமிழ்நாட்டுக்குச் சட்டப்பூர்வமாகப் பெயர்மாற்றம் செய்யப்பட்ட தினத்தை தமிழ்நாடு நாள் எனக் கொண்டாடுவது என்பது தேவையற்ற குழப்பத்தை ஏற்படுத்தும் வரலாற்றுத்திரிவாகும்.

மற்ற மாநிலங்களெல்லாம் தங்கள் தனித்த நிலமாகப் பிரித்து அறிவிக்கப்பட்ட வரலாற்றுச் சிறப்புமிக்க தினத்தைக் கொண்டாடிக்கொண்டிருக்க, இங்கு மட்டும் பெயர் சூட்டப்பட்ட தினத்தைக் கொண்டாடுவது வேடிக்கையானதாகும்.


இந்திய ஒன்றிய அரசு 1956இல் மெட்ராஸ் மாகாணத்தை மொழிவாரியாகப் பிரித்த நாளான நவம்பர் முதலாம் நாள்தான் தமிழ்நாடு என்கின்ற நமது தாயக நிலம் சட்டப்படி அங்கீகரிக்கப்பட்டு மொழியால் அமையப்பெற்ற நிலப்பகுதியாக நிறுவப்பட்ட வரலாற்றுச் சிறப்பு மிகுந்த நாளாகத் திகழ்கிறது.

அத்தகைய பெரும்புகழும் சான்றோர் பெருமக்களின் ஈகங்களும் போராட்டங்களும் வரலாறாகக் கொண்ட, நவம்பர் முதலாம் நாள் தான் 'தமிழ்நாடு நாளாக' அறிவிக்கப்பட வேண்டும் என்ற நாம் தமிழர் கட்சி மற்றும் இன்னபிற இயக்கங்கள், தமிழுணர்வாளர்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, கடந்த அ.தி.மு.க. ஆட்சிக்காலத்தில் 'தமிழ்நாடு நாள்' கொண்டாடப்படும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்பு வெளியிடப்பட்டது.

அதனைத் தற்போதைய தி.மு.க. அரசு, தன்னிச்சையாக எதேச்சதிகாரப் போக்கோடு மாற்றியிருப்பது எவ்வகையிலும் ஏற்புடையதல்ல. அரசியல் உள்நோக்கம் கொண்ட தி.மு.க. அரசின் தான்தோன்றித்தனமான அறிவிப்புக்குக் கடும் கண்டனத்தையும், எதிர்ப்பையும் பதிவுசெய்கிறேன்.

ஆகவே, ஜூலை 18 ஐ தமிழ்நாடு நாளாகக் கொண்டாடப்படும் அறிவிப்பைத் திரும்பப்பெற்று, நவம்பர் 1 ஐயே தமிழ்நாடு நாளாக அறிவித்திடவும், அந்த நாளில் அரசுப் பொதுவிடுமுறையளித்து, தமிழ் மூவேந்தர்களின் அரச இலச்சினைகளைப் பொறித்த தமிழ்நாட்டுக் கொடியை மாநிலமெங்கும் ஏற்றி, பேரெழுச்சிமிக்க திருவிழாவாக அரசு சார்பில் கொண்டாடிடவேண்டுமென்றும் தமிழ்நாடு அரசினை நாம் தமிழர் கட்சி சார்பாக வலியுறுத்துகிறேன் என தெரிவித்திருக்கிறார்.

## தமிழ்நாடு நாள் குறித்து கலந்தாய்வு செய்து முடிவெடுக்க தமிழக முதல்வரிடம் திருமாவளவன் எம்.பி. கோரிக்கை



'தமிழ்நாடு நாள் தொடர்பாக அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு கலந்தாய்வு செய்து முடிவெடுப்பது சாலச் சிறந்தது' என தொல் திருமாவளவன் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாடு என அறிஞர் அண்ணா பெயர் சூட்டிய ஜூலை 18 ஆம் நாளையே தமிழ்நாடு நாளாக இனி கொண்டாட அரசாணை விரைவில் வெளியிடப்படும் என, தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்திருந்தார். முதலமைச்சரின் இந்த அறிவிப்புக்கு அரசியல் கட்சிகளிடையே மாறுபட்ட கருத்துக்கள் நிலவிவருகின்றன.

இந்தநிலையில், தமிழ்நாடு நாள் தொடர்பாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான தொல். திருமாவளவன் கூறுகையில், "தமிழ்நாடு நாள் தொடர்பாக அரசாணை பிறப்பிப்பதற்கு முன்பு அனைத்துக்கட்சித் தலைவர்கள், எல்லைமீட்புப் போராளிகள், இன உணர்வாளர்கள் மற்றும் தமிழறிஞர்கள் போன்றோரை அழைத்துக் கலந்தாய்வு செய்து முடிவெடுப்பது சாலச் சிறந்தது. முதல்வருக்கு எமது வேண்டுகோளாக இதனை முன்வைக்கிறோம்" என அவர் குறிப்பிட்டுள்ளார்.

## 'முதுமலையில் பட்டாசுகள் வெடிக்கவேண்டாம்' பிரதேச மக்களுக்கு வனத்துறை அறிவுரை



தமிழகத்தின் நீலகிரி மாவட்டம் முதுமலையில், பட்டாசுகளின்றி பசுமைத்தீபாவளியைக் கொண்டாட வனத்துறையினர் அறிவுறுத்தியுள்ளனர்.

அதிக சத்தங்களை எழுப்பும் பட்டாசுகளை வெடிப்பதால் வனவிலங்குகள் கலவரமடைந்து ஊருக்குள் வர வாய்ப்பிருப்பதாகக் கூறப்படுகிறது. இதனைக் கருத்தில் கொண்டு, முதுமலைப் பகுதியில் உள்ள பொக்காபுரம், ஆச்சக்கரை உள்ளிட்ட பத்திற்கும் மேற்பட்ட கிராமங்களில் பொதுமக்கள் பட்டாசுகளை வெடிக்க வேண்டாம் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. இது தொடர்பாக பொதுமக்களுக்கு அறிவுறுத்தல் பிரசுரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

அத்தோடு, மசினகுடி சுற்றுவட்டாரப் பகுதியில் தங்கும் விடுதிகளுக்கு வரும் சுற்றுலாப் பயணிகளும், தீ மூட்டவும், பட்டாசு வெடிக்கவும் வேண்டாம் என வனத்துறையினர் கேட்டுக்கொண்டுள்ளனர். தடையை மீறி பட்டாசுகளை வெடித்தால், அதற்கு அனுமதி வழங்கிய தங்கும் விடுதிகள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



## சீன எல்லையில் மோதலுக்குத் தயாராக அனைத்துப் படைகளும் உஷார் நிலையில்

புறஊதாக் கதிர்களின் உதவியுடன் துல்லியமாகத் தாக்க உதவும் சிறு ரக பீரங்கிகள், துப்பாக்கிகள், அதிநவீன கண்காணிப்புச் சாதனங்களை சீன எல்லையில் இந்தியா தயார் நிலையில் வைத்துள்ளன எனச் செய்திகள் வெளியாகியுள்ளன. இவை தவிர, ஆயுதங்களை விரைவாக ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்கு கொண்டு செல்ல உதவும் சினூக் ரக ஹெலிக்கொப்டர்களும் எல்லையில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் இவை அனைத்துமே அண்மையில் அமெரிக்காவிலிருந்து பெறப்பட்டவை என்றும் கூறப்படுகிறது. இவை தவிர இந்தியத் தயாரிப்பு ஏவுகணைகளும் அங்கே நிலைநிறுத்தி வைக்கப்பட்டுள்ளன என்றும் தெரியவந்துள்ளது.

சீன எல்லையில் உள்ள அனைத்து படைப் பிரிவுகளும் முழுமையான தயார் நிலையில் இருப்பதாக இந்திய இராணுவத்தின் கிழக்குப் பிராந்தியத் தளபதி லெப்டினன்ட் ஜெனரல் மனோஜ் பாண்டே தெரிவித்திருக்கிறார். கடந்தாண்டு லடாக் பகுதியில் ஏற்பட்ட மோதலைத் தொடர்ந்து எல்லைப் பதற்றத்தை தணிக்க இந்தியாவும் சீனாவும் தொடர்ந்து பேச்சு நடத்திவருகின்றன. ஆனால், எல்லையில் முழு இயல்பு திரும்பாத நிலையில் இருதரப்பும் தங்கள் படைப்பல வலிமையை அங்கே அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## அயோத்தி ராமர் கோவிலுக்கு புனித நீர் அனுப்பிய ஆப்கானிஸ்தான் சிறுமி



இந்தியாவின் உத்தரப் பிரதேச மாநிலம் அயோத்தியில் ராமர் கோவில் கட்டுமானப் பணி கடந்த ஆண்டு ஒகஸ்ட் மாதம் தொடங்கி நடைபெற்றுவருகிறது. கோவில் கட்டுமானப் பணிக்காக நாடு முழுவதிலும் இருந்து கட்டுமானப் பொருள்களும் நன்கொடைகளும் வழங்கப்படுகின்றன. இதேபோல், கோவிலின் கட்டுமானப் பணியில் பயன்படுத்துவதற்காக 115 நாடுகளில் ஓடும் நதிகள் மற்றும் கடல்களில் இருந்து நீர் வரவழைக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டது.

இந்தநிலையில், உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் லக்னோவில் நடந்த நிகழ்ச்சியில் பேசியபோது, ஆப்கானிஸ்தானில் இருந்து சிறுமி ஒருவர் புனித நீரை அனுப்பியிருந்தார் எனக் கூறினார். 'ஆப்கானிஸ்தானைச் சேர்ந்த சிறுமி ஒருவர் காபூல் நதி நீரை அயோத்தி ஸ்ரீராம ஜென்மபூமிக்கு வழங்குவதற்காக பிரதமர் மோடிக்கு அனுப்பி வைத்துள்ளார். அதன்படி, அந்தப் புனித நீரை ஸ்ரீராமருக்கு காணிக்கையாக வழங்குவதற்கு நான் அயோத்தி செல்கிறேன்' என யோகி ஆதித்யநாத் தெரிவித்திருக்கிறார்.

# மக்களின் காணிகளை வனஜீவராசிகள் திணைக்களம் கையேற்பதை ஏற்கமுடியாது என்கிறார் வியாழேந்திரன்

மக்களின் வாழ்வாதார குடியிருப்புக் காணிகளை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் எல்லைக் கற்களை போட்டு தன்னகப்படுத்துவதற்கு முயற்சிப்பது ஏற்றுக்கொள்ள முடியாத செயல் என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் தெரிவித்தார்.

ஏறாவூர் பிரதேச செயலாளர் பிரிவுக்கு உட்பட்ட பதுளை வீதியில் பெரிய புல்லுமலை தொடக்கம் கொடுவாமடு, படுவான்கரை வரை உள்ள மக்களுக்குச் சொந்தமான நிலப்பகுதிகள் வனத்துறை பாதுகாப்பு திணைக்களத்தினூடாக எல்லைக் கற்களை போடும் வேலை முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.



இந்த நிலையில், இந்தப் பிரச்சினை தொடர்பில் உண்மைத்தன்மையைக் கண்டறிவதற்காக சென்றிருந்த சந்தர்ப்பத்திலேயே, இராஜாங்க அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது மேலும் தெரிவித்த அவர்–

கடந்த 2015 ஆம் ஆண்டு தொடக்கம் இவ்வாறான அத்துமீறல் செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்திலும் நாங்கள் தலையிட்டு வனத்துறை பாதுகாப்பு அதிகாரிகளுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு அவற்றைத் தடுத்து வந்திருக்கின்றோம்.

தற்போதும் மக்களின் வாழ்வாதாரக் குடியிருப்புக் காணிகளை வனஜீவராசிகள் பாதுகாப்பு திணைக்களம் எல்லைக் கற்களை போட்டு தன்னகப்படுத்துவதற்கு முயற்சி செய்து வருகின்றது.

நாங்கள் அரசாங்கத்துடன் இணைந்து இந்த வேலைத்திட்டங்களை தடுத்து நிறுத்துவதுடன் மக்கள் வாழ்ந்த இடங்களை மக்களுக்குப் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுப்போம்.

இன்று வனத்துறை பாதுகாப்பு திணைக்களத்தின் ஊடாக எல்லைக் கற்கள் இடப்படும் பிரதேசங்களில் மக்கள்குடியிருப்புகளும்மற்றும்வாழ்வாதார காணிகளும் காணப்படுகின்றன.

இவர்கள் இங்கு பல வருட காலமாக வாழ்ந்ததற்கான ஆவணங்களை வைத்திருக்கின்றமையுடன் பல வருட காலமாக விவசாய நடவடிக்கைகள் மேற்கொண்டதற்கான ஆதாரங்களும் குடியிருப்புகள் காணப்பட்டமைக்கான ஆதாரங்களும் காணப்படுகின்றன. ஒரு சிலரிடம் ஆவணங்கள் இல்லாமைக்கான காரணம் கடந்த யுத்தகாலத்தில் பல்வேறு இடங்களுக்கு இடம்பெயர்ந்தனர்.

இவ்வாறான சூழ்நிலையில் மக்கள் வாழ்ந்தமைக்கான ஆதாரங்கள் காணப்படுகின்ற சந்தர்ப்பத்தில் இவற்றை கருத்திற்கொண்டு தொல்பொருள் திணைக்களம் மற்றும் வனப் பாதுகாப்பு திணைக்களம் செயற்பட வேண்டும்.

எதிர்வரும் காலங்களில் நாங்கள் வனத்துறை பாதுகாப்பு திணைக்களத்துடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு மக்களின் வாழ்வாதாரக் காணிகளைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்போம். – என இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன் மேலும் தெரிவித்தார்.



# மட்டக்களப்பில் ஆலயங்களை சேதப்படுத்தும் காட்டு யானை

ஏறாவூர்ப்பற்று செங்கலடி பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட பன்குடாவெளி சிவ முத்துமாரியம்மன் மற்றும் ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலயங்களிற்குள் நேற்று அதிகாலை புகுந்த காட்டு யானைகளால் ஆலயங்களுக்கு சேதம் விளைவிக்கப்பட்டுள்ளது.

இதனால் ஆலயங்களின் கட்டடங்கள் பகுதியளவில் சேதமாகியுள்ளதுடன், ஆலய வளாகத்தில் நடப்பட்டிருந்த பயன்தரும் மரங்களும் முற்றாக சேதமடைந்துள்ளன.

அத்தோடு ஆலயங்களுக்குள் புகுந்த காட்டு யானைகள் பூசைக்காக வைக்கப்பட்டிருந்த பூசைப்பொருள்களையும் சேதப்படுத்தியுள்ளன. அண்மைக் காலமாக இப்பகுதிகளில் யானைகள் அதிகமாக சஞ்சரிக்கின்றமையை காணமுடிவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

# இணைந்த வடக்கு – கிழக்கின் முதலமைச்சராக நான் ஆவேன்!

## சாணக்கியன் உறுதி

வடக்கு – கிழக்கு இணைந்த மாகாண சபையில் முதலமைச்சராக இருக்க விரும்புகின்றேன் என்று நான் இதற்கு முன்னர் அறிவித்திருந்தேன். எனினும் அப்போது அதனை நான் விளையாட்டுக்குத்தான் கூறியிருந்தேன். ஆனால் இப்போது அதனை சிந்தித்துப் பார்த்தால் அது ஒரு நல்ல திட்டம். எனக்கு அப்படி ஒரு வாய்ப்பு வந்தால் நான் நிச்சயமாக அதனை விரும்புவேன் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இராச மாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள்ளார்.



வானொலி ஒன்றுக்கு வழங்கிய நேர்காணலில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் –

வடக்கும் கிழக்கும் இணைந்த மாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்கும் எனது விருப்பத்தை நீங்கள் பார்க்கலாம். நான் இப்படி கூறியவுடன், சாணக்கியன் எவ்வாறு இப்படிக் கூற முடியும் என்று என் மீது விமர்சனங்கள் முன்வைக்கப்படலாம். இது என்னுடைய விருப்பம், எனது தனிப்பட்ட ஆசை.

கிழக்கில் எனது செயற்பாடுகளைப் பொறுத்தவரையில், நான் ஒருபோதும் இஸ்லாமிய மக்களுக்கு எதிராக பேசி என்னுடைய அரசியலை நான் செய்தவனல்லன்.

கடந்த 2020 ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்ற தேர்தலில் பொதுஜன பெரமுன கட்சியை வெற்றி பெறச் செய்ய கிழக்கு மாகாண முஸ்லிம்கள் ஒருபோதும் விரும்பியவர்களல்லர். அதற்கு எதிராகத்தான் மயில், மரம், குதிரை போன்ற பலருக்கு வாக்களித்தனர். ஆனால் அவர்கள் மக்களின் வாக்குகளைப் பெற்று வெற்றிபெற்று விட்டு பின்னர் மொட்டுடன் போய் இணைந்து கொள்வார்கள் என அந்த மக்கள் ஒருபோதும் எண்ணியிருக்கவில்லை.

தமிழ் – முஸ்லிம் ஒற்றுமை இல்லை என்றால் கிழக்கு மாகாணத்திலே இன்னும் ஒரு பத்து வருடத்தின் பின்னர் தமிழ் மக்கள் பெரும்பான்மை சமூகமாக வாழ மாட்டார்கள். இலங்கையிலே ஒன்பது மாகாணங்களிலே 7 மாகாணங்கள் பெரும்பான்மை சமூகம் கையிலே வைத்திருக்கும் மாகாணங்கள்.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் ஒற்றுமையாக வாழவில்லை என்றால் எட்டாவது மாகாணமாக கிழக்கு மாகாணம் பெரும்பான்மை சமூகத்தினரின் கைகளுக்குச் சென்று விடும் எனக் குறிப்பிட்டுள்ளார்.

# எனது மகனை அடித்து கொலை செய்தார்கள்!

## கண்ணீர் விட்டு கதறும் தாய், தந்தை

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரனின் வீட்டின் முன்னால், அவரது மெய்பாதுகாவலர் ஒருவரால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்ட பாலசுந்தரத்தின் வழக்கு இன்றைய தினம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற நீதிபதி ரிஸ்வான் முன்னிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டுள்ளது.

இந்த வழக்கு தொடர்பாக உயிரிழந்த பாலசுந்தரத்தின் தாய் தந்தையர் கண்ணீர்விட்டு கருத்து வெளியிடும்போது –

இன்று காலை வழக்கு விசாரணைக்கு 8 மணியளவில் நாங்கள் வந்திருந்த போதும் எங்களுடைய வழக்கு தாமதமாகவே கூட்டப்பட்டது. நாங்கள் எதிர்பார்ப்பது என் மகனுடைய கொலைக்கான நீதி கிடைக்க வேண்டும். நீதிபதி ஐயா 15 ஆம் திகதி விளக்கம் பெறப்பட உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

இருந்தபோதிலும் எங்களை மாறி மாறி ஒவ்வொரு இடம் அலைய வைத்துக் கொண்டே இருக்கின்றார்கள். உடல் கூற்று பரிசோதனை அறிக்கை கிடைக்கப் பெற்றதாக இன்று நீதிபதி ஐயா எங்களிடம் கேட்டபோது நாங்கள் மட்டக்களப்பு பொலிஸாரிடம் சென்றபோது ஏறாவூர் பொலிஸாரிடம் கேட்குமாறு கூறுகின்றார்கள்.

மட்டக்களப்பு பொலிஸார் இவ்வாறு எங்களை அங்கேயும் இங்கேயும் அலையவைத்து கொண்டே இருக்கின்றார்கள். திட்டமிட்டு எனது மகனை அடித்து சுட்டு கொலை செய்துவிட்டு இன்று எங்களை நாய் போன்று அலைய வைக்கின்றார்கள்.

எனது மகன் பிழை செய்திருந்தால் அவர்களது சி.சி.டிவி. கமராவில் உள்ள வீடியோக்களை காட்டலாம் தானே எங்களது மகன் பிழை செய்திருந்தால் நாங்கள் அதை ஒத்துக்கொள்ளத் தயாராக இருக்கின்றோம்.

சும்மா போன எனது மகனை பிடித்து வைத்து அடித்துக் கொலை செய்துவிட்டு இப்படியே அலைய விடுகின்றனர். இன்று 5 மாதங்கள் கடந்து விட்டன. நாங்கள் நீதிபதி நல்லதொரு முடிவை தருவார் என எதிர்பார்க்கின்றோம் என கண்ணீருடன் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும் குறித்த வழக்கின் சந்தேகநபரை 14 நாள்கள் மேலும் விளக்கமறியலில் வைக்குமாறு நீதிபதி உத்தரவிட்டமையுடன் எதிர்வரும் 15 ஆம் திகதி வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் என உத்தரவிட்டுள்ளார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு





# நியூசிலாந்து 8 விக்கெட்டுக்களால் வெற்றி இந்தியாவுக்கு தொடர்ந்து இரு தோல்விகள்

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சூப்பர் -12 சுற்றின் நேற்றைய இரண்டாவது போட்டியில் இந்திய அணியை நியூசிலாந்து அணி 8 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றுள்ளது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற நியூசிலாந்து அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. முதலில் துடுப்பெடுத்தாட அழைக்கப்பட்ட இந்திய அணி தொடர்ச்சியான தடு மாற்றங்களோடு, 20 ஓவர்கள் நிறைவில் 7 விக்கெட்டுக்களை இழந்து 110 ஓட்டங்களை மட்டுமே பெற்றது. ரவீந்திர ஜடேஜா அதிகபட்சமாக 26 ஓட்டங்களையும், ஹார்திக் பாண்ட்யா 23 ஓட்டங்களையும் எடுத்தனர். நியூசிலாந்து அணியின் ட்ரெண்ட் போல்ட் 3 விக்கெட்டுக்களையும் இஷ் சோதி 2 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர். இதனை அடுத்து 111 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய நியூசிலாந்து அணி 14.3 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை மட்டும் இழந்து வெற்றி இலக்கையடைந்தது. டரில் மிட்செல் 49 ஓட்டங்களையும், அணித்தலைவர் கேன் வில்லியம்சன் ஆட்டமிழக்காது 33 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர். இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக இஷ் சோதி தெரிவானார். இந்த வெற்றியோடு குழு 2 இல் 2 புள்ளிகளோடு நியூசிலாந்து மூன்றாவது இடத்தைப் பிடித்திருக்கிறது. இரண்டு போட்டிகளில் விளையாடியிருக்கும் இந்திய அணி இரண்டிலுமே தோல்வியடைந்திருக்கிறது.



# நமீபியாவுடன் வெற்றிபெற்றது ஆப்கானிஸ்தான் அரையிறுதிக்கான வாய்ப்பினை தக்கவைத்தது

ரி-20 உலகக்கிண்ணக் கிரிக்கெட் தொடரின் சூப்பர் -12 சுற்றுக்கான நேற்றைய முதலாவது போட்டியில் நமீபியா மற்றும் ஆப்கானிஸ்தான் அணிகள் மோதியிருந்தன. இந்தப் போட்டியில் ஆப்கானிஸ்தான் அணி 62 ஓட்டங்களால் அபாரமான வெற்றியைப் பெற்றது.

இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற ஆப்கானிஸ்தான் அணி முதலில் துடுப்பாட்டத்தினைத் தேர்வு செய்து, 20 ஓவர்கள் நிறைவில் 5 விக்கெட்டுக்களை இழந்து 160 ஓட்டங்களைச் சேர்த்தது. மொஹமட் சஹ்ஷாட் 45 ஓட்டங்களையும், ஹஸ்ரத்துல்லா சாய் 33, மொஹமட் நபி ஆட்டமிழக்காது 32, அஸ்கர் ஆப்கன் 31 ஓட்டங்களையும் எடுத்தனர். நமீபிய அணியின் ருபென் ட்ரம்பல்மென் மற்றும் லொப்டி ஈட்டன் இருவரும் தலா 2 விக்கெட்டுக்களை வீழ்த்தினர்.

பின்னர் வெற்றி இலக்கான 161 ஓட்டங்களை நோக்கித் துடுப்பெடுத்தாட ஆரம்பித்த நமீபிய அணி, ஆப்கானிஸ்தானின் சிறப்பான பந்துவீச்சில் ஓட்டங்களைப் பெறமுடியாது திணறி, 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 98 ஓட்டங்களை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தது. டேவிட் விஸே அதிகபட்சமாக 26 ஓட்டங்களை எடுத்தார். ஆப்கானிஸ்தான் அணியின் நவீன்-உல்-ஹக் மற்றும் ஹமிட் ஹஸன் ஆகியோர் தலா 3 விக்கெட்டுக்களையும், குல்படின் நயிப் 2 விக்கெட்டுக்களையும் கைப்பற்றியிருந்தனர். போட்டியின் ஆட்டநாயகனாக நவீன்-உல்-ஹக் தெரிவானார்.

இந்தப்போட்டியின் வெற்றியோடு ஆப்கானிஸ்தான் அணி 4 புள்ளிகளோடு குழு 2 இல் இரண்டாமிடத்தைப் பிடித்துள்ளதோடு, அரையிறுதிக்கான வாய்ப்பினையும் தக்கவைத்துள்ளது.

ஆப்கானிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட வீரருமான அஸ்கர் ஆப்கன், இந்தப் போட்டியுடன் சர்வதேச கிரிக்கெட்டிலிருந்து ஓய்வுபெறுகிறார் என்பது குறிப்பிடத்தக்கது.



# தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப்பில் 5 தேசிய சாதனைகள் படைக்கப்பட்டன

இலங்கை மெய்வல்லுநர் சங்கத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட 99ஆவது தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இரண்டாவது அத்தியாயம் நேற்று ஞாயிற்றுக்கிழமை கொழும்பு சுகதாஸ விளையாட்டரங்கில் நிறைவுக்கு வந்தது. தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் தொடரின் இந்த இரண்டாவது தொடரில், ஐந்து இலங்கைச் சாதனைகளும், 3 போட்டிச் சாதனைகளும் முறியடிக்கப்பட்டன.

இதில் பெண்களுக்கான 1,500 மற்றும் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டிகளில் கயன்திகா அபேரத்ன புதிய இலங்கைச் சாதனையைப் புரிய, பெண்களுக்கான கோலூன்றிப் பாய்தலில் சச்சினி பெரேரா, பெண்களுக்கான நீளம் பாய்தலில் சாரங்கி சில்வா மற்றும் ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டப் போட்டியில் ரொஷான் தம்மிக ஆகியோர் புதிய இலங்கைச் சாதனைகளை ஏற்படுத்தியிருந்தனர். இதில் சச்சினி பெரேரா, சாரங்கி சில்வா ஆகிய இருவரும் தேசிய மெய்வல்லுநர் சம்பியன்ஷிப் சாதனைகளையும் முறியடித்திருந்தமை மற்றுமொரு சிறப்பம்சமாகும்.

இவர்களுடன், ஆண்களுக்கான குண்டெறிதல் போட்டியில் சமித் மதுங்க போட்டிச் சாதனையொன்றைப் படைத்துத் தங்கப் பதக்கத்தை வென்றார். இலங்கையின் முன்னணி மெய்வல்லுநர் வீராங்கனைகளில் ஒருவரான கயந்திகா அபேரத்ன, இரண்டு இலங்கைச் சாதனைகளை முறியடித்தார். சனிக்கிழமை நடைபெற்ற பெண்களுக்கான 1,500 மீற்றர் ஓட்டப் போட்டியை 4 நிமிடங்கள் 09.12 செக்கன்களில் நிறைவுசெய்து புதிய இலங்கைச் சாதனையுடன் தங்கப் பதக்கம் வென்றார். ஞாயிற்றுக்கிழமை காலை நடைபெற்ற பெண்களுக்கான 5,000 மீட்டர் ஓட்டப் போட்டியிலும் அவர் 15 நிமிடங்கள் 55.84 செக்கன்களில் ஓடிமுடித்து, இரண்டாவது புதிய இலங்கைச் சாதனையைப் பதிவுசெய்தார். இலங்கையின் மெய்வல்லுநர் வரலாற்றில் 5,000 மீற்றர் ஓட்டப் போட்டியை 15 நிமிடங்களுக்குள் ஓடிமுடித்த முதல் வீராங்கனை என்ற பெருமையையும் அவர் பெற்றுக்கொண்டார். சனிக்கிழமை நடைபெற்ற ஆண்களுக்கான 110 மீற்றர் சட்டவேலி ஓட்டப்போட்டியில் பங்குகொண்ட ரொஷான் தம்மிக, 24 வருடங்கள் தகர்க்கப்படாத இலங்கைச் சாதனையை இரண்டு தடவைகள் முறியடித்துச் சாதனை படைத்தார். சனிக்கிழமை காலை நடைபெற்ற 110 மீற்றர் சட்டவேலி ஓட்டத்தின் தகுதிச்சுற்றுப் போட்டியை 13.97 செக்கன்களில் நிறைவுசெய்து புதிய இலங்கைச் சாதனையுடன் முதலிடத்தைப் பெற்றுக்கொண்ட அவர், அதே தினத்தன்று மாலை நடைபெற்ற இறுதிப்போட்டியில் 13.89 செக்கன்களில் ஓடிமுடித்துத் தனது சொந்த இலங்கைச் சாதனையையே முறியடித்து தங்கப் பதக்கம் வென்றார். கோலூன்றிப் பாய்தலில் நடப்பு இலங்கைச் சம்பியனான சச்சினி பெரேரா, குறித்த போட்டியில் 3.57 மீற்றர் உயரத்துக்குத் தாவி, தனது சொந்த இலங்கைச் சாதனையை புதுப்பித்துத் தங்கப் பதக்கத்தை வென்றார்.

குறித்த போட்டியில் பங்குகொண்ட இலங்கைக் கடற்படை வீராங்கனை இமாஷா உதானி சில்வா (3.50 மீற்றர்) வெள்ளிப் பதக்கத்தையும், யாழ். சாவகச்சேரி இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவியான என்.டக்சிதா (3.40 மீற்றர்) வெண்கலப் பதக்கத்தையும் பெற்றுக்கொண்டனர். பெண்களுக்கான நீளம் பாய்தலில் தெற்காசிய சம்பியனான சாரங்கி சில்வா, நேற்று நடைபெற்ற பெண்களுக்கான நீளம் பாய்தலில் 6.48 மீற்றர் தூரம் பாய்ந்து, தனது சொந்த தேசியச் சாதனையை முறியடித்தார். குண்டெறிதல் தேசிய சம்பியனான சமித் மதுங்க தங்கப் பதக்கம் வென்றார். குறித்த போட்டியில் 17.36 மீற்றர் தூரத்துக்கு வீசிய அவர், புதிய தேசிய சம்பியன்ஷிப் சாதனையை நிகழ்த்தினார்.

காலைக்கதிர்
Kalaikkathir மாலைப்பதிப்பு



# நாட்டு மக்களை இரு தினங்கள் இருளில் வைத்திருக்க முயல்வது எத்தகைய அநீதி?

ஜோன்ஸ்டன் காட்டம்



நாட்டு மக்களை இரு தினங்கள் இருளில் வைத்திருக்க முயல்வது எத்தகைய அநீதியான முடிவாகும் என ஆளும் தரப்பு பிரதம கொறடா நெடுஞ்சாலைகள் அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

புதிய களனி பாலத்தை பார்வையிடும் விஜயத்தின் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இதன்போது, கெரவலப்பிட்டிய மின் உற்பத்தி நிலையம் தொடர்பில் கடுமையான தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்கப்போவதாக தொழிற்சங்கங்கள் எச்சரிக்கை விடுத்துள்ளமை தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்த அமைச்சர், 'தொழிற்சங்கங்கள் எடுக்கும் ஒவ்வொரு முடிவும் சரியானது என்று சொல்ல முடியாது. தொழிற்சங்கம் என்பது அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளை உள்ளடக்கியதாகும். அண்மையில் துறைமுக தொழிற்சங்கங்கள் கிழக்கு முனையத்தை வழங்குவதை எதிர்த்தன. இதன் விளைவாக கிழக்கு முனையத்துக்குப் பதிலாக அதனைவிட பெரிய மேற்கு முனையம் வழங்கப்பட்டது.

தொழிற்சங்கங்கள் அரசியல் கோணத்தில் இல்லாமல் நாடு முகங்கொடுத்துள்ள நெருக்கடி நிலை தொடர்பாக சிந்தித்து செயற்பட வேண்டும். ஓர் அலகு மின்சாரத்தின் விலை குறைவதாக இருந்தால் தொழிற்சங்கங்கள் ஏன் அதனை எதிர்க்கின்றன?

குறைந்த விலையில் மின்சாரம் கிடைக்க அரசு நடவடிக்கை எடுத்தால் அது ஊழல் ஆகாது. தொழிற்சங்கங்கள் அதிக விலைக்கு சார்பாக இருந்தால் அதன் பின்னணியில் அரசியல் நோக்கம் இருக்கிறது. தொழிற்சங்கங்கள் இந்த நாட்டு மக்களை இரண்டு நாள்களுக்கு இருளில் வைத்திருக்க முயல்கின்றன என்றால் அது எத்தகைய அநீதியான முடிவாகும். இதை அறிவுள்ள நாட்டு மக்கள் கவனமாகப் பார்க்க வேண்டும். இந்த நேரத்தில் மின்சார விலையை குறைக்கும் அரசின் திட்டம் மக்களுக்கு கிடைத்த வெற்றியாகும்' என அவர் மேலும் தெரிவித்தார்.

# பொருள்களின் விலைகள் எதிர்காலத்தில் அதிகரிக்கும்!

எஸ்.பி. ஆரூடம்



நாட்டுக்கு வருமானம் இல்லை. பொருளாதாரம் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, எதிர்காலத்தில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கும். பொருள்களுக்கும் தட்டுப்பாடு ஏற்படக்கூடும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி. திஸாநாயக்க சுட்டிக்காட்டியுள்ளார்.

கொத்மலை – பூண்டுலோயா பகுதியில் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்துகொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு –

'சுற்றுலாத்துறை, வெளிநாட்டு வேலைவாய்ப்பு, ஆடை ஏற்றுமதி ஆகியன பாதிக்கப்பட்டுள்ளமையால் வருமான வழிகள் இழக்கப்பட்டுள்ளன. இதனால் அரசுக்கு பெரும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது.

எதிர்காலத்தில் பொருள்களின் விலைகள் அதிகரிக்கப்படக் கூடும். உலகளவில் இன்று பொருள்களுக்கு தட்டுப்பாடுகள் ஏற்பட்டுள்ளன. இங்கும் அந்நிலைமை ஏற்படலாம். கப்பல் கட்டணம் நூற்றுக்கு 300 வீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

போர் காலத்தில் பொருளாதாரம் சரிந்தது. போர் முடிந்த பின்னர் 2015 ஆகும்வரை சிறந்த வளர்ச்சி மட்டத்தில் நாம் இருந்தோம். அடுத்த வருட இறுதியாகும்வரை முன்னேற்றம் ஏற்படலாம்.

யுகதனவி விவகாரத்தில் அரசியல், பொருளாதாரம் என இரு பக்கங்கள் உள்ளன. அவை தொடர்பில் புரிந்துணர்வு இல்லாமல் சிலர் கதைக்கின்றனர். யுகதனவி தொடர்பில் அரசு எடுத்துள்ள முடிவு சரியானது' – என்றார்.

# சமையல் எரிவாயுக்களின் தட்டுப்பாடு தொடர்கிறது

நாட்டில் சமையல் எரிவாயுக்கான விலை அதிகரிக்கப்பட்டுள்ள போதிலும் சில இடங்களில் தற்போதும் எரிவாயுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் சில இடங்களில் சமையல் எரிவாயு பதுக்கி வைக்கப்பட்டுள்ளதாக நுகர்வோர் குற்றஞ்சாட்டுகின்றனர்.

அதன்படி, குருணாகல் உள்ளிட்ட பல பகுதிகளில் சமையல் எரிவாயுக்கு தட்டுப்பாடு நிலவுவதாகத் தெரிவிக்கப்படுகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இலங்கை - பிரான்ஸ் விமான சேவை 6 வருடங்களின் பின் நேற்று ஆரம்பம்

இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான நேரடி விமான சேவை 6 வருடங்களின் பின்னர் நேற்று (ஞாயிற்றுக்கிழமை) மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக சுற்றுலாத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. அதன்படி, ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் விமானம் ரிஎல் 563 நேற்று அதிகாலை ஒரு மணிக்கு பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸின் பாரிஸில் உள்ள விமான நிலையத்துக்குப் புறப்பட்டது.

இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையில் நேரடி விமான சேவையை ஆரம்பித்து வைப்பதற்கான விழா பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நடைபெற்றது.

ஒவ்வொரு புதன், வெள்ளி மற்றும் ஞாயிற்றுக்கிழமைகளில் ஸ்ரீலங்கன் ஏர்லைன்ஸ் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் இருந்து பிரான்ஸ் விமான நிலையத்துக்கு செல்லும் என்றும் அதே நாளில் பிரான்ஸில் இருந்து இலங்கைக்கு மற்றொரு ஸ்ரீலங்கன் விமானம் வரவுள்ளதாகவும் சுற்றுலா அமைச்சர் பிரசன்ன ரணதுங்க கூறினார்.

1980 களில் இலங்கைக்கும் பிரான்ஸுக்கும் இடையிலான முதலாவது நேரடி விமான சேவை ஆரம்பிக்கப்பட்டது. அதன் பின்னர் 2015 இல், இந்த நேரடி விமானங்கள் நிறுத்தப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

# லயன் மகாதேவா பூமாதேவி ஞாபகார்த்தமாக தெல்லிப்பழையில் உலருணவு வழங்கப்பட்டது

## சுன்னாகம் லயன்ஸ் கழகத்தின் ஏற்பாட்டில்





சுன்னாகம்லயன்ஸ்கழகத்தால்சமூகசேவகர்களான லயன் மகாதேவா – பூமாதேவி நினைவாக மிகவும் வறுமையில் உள்ள மக்களுக்கு உலருணவுப் பொதிகள் கடந்த சனிக்கிழமை வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செல்வராகினி தலைமையில் நடைபெற்ற வலயத் தலைவர், பிராந்தியத் தலைவர் ஆகியோரின் வருகை நிகழ்விலேயே இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

சுன்னாகம் லயன்ஸ் கழக உறுப்பினர் லயன் ம.பிரிதுவிராஜின் அனுசரணையில் கழகத்தின் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமாகிய லயன் சி.ஹரிகரனின் ஒழுங்கமைப்பில் தந்தை செல்வாபுரம் கிராம அலுவலர் பிரிவிலுள்ள மக்களுக்கே இந்த உலருணவுப் பொதிகள் வழங்கப்பட்டன.

லயன் மகாதேவா – பூமாதேவி தம்பதிகள் சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஊடாக சமுதாயத்தின் வளர்ச்சி கருதி பல்வேறுபட்ட நற்கருமங்களை ஆற்றியவர்கள். எத்தனையோ வறிய மாணவர்களின் கல்விக்கு ஒளியூட்டியவர்கள். அவர்களைப் போன்று அவர்களுடைய மகன் லயன் ம.பிருதுவிராஜும் சுன்னாகம் லயன்ஸ் கழகம் ஊடாக பல்வேறு செயற்பாடுகளை மேற்கொண்டு வருபவர். சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியில் தனது தாய், தந்தையின் ஞாபகார்த்தமாக லயன் மகாதேவா – பூமாதேவி மண்டபத்தை இரு மாடிகளுடன் தனது சொந்த நிதியில் அமைத்து கல்லூரிக்கு வழங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 01.11.2021இல் வெளியிடப்பெற்றது.